# කාර්ය සාධන වාර්තාව
# செயலாற்றுகை அறிக்கை
# Performance Report

# 2014

## භාණ්ඩාගාර මෙහෙයුම් දෙපාර්තමේන්තුව

## திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

## Department of Treasury Operations


මුදල් අමාත්‍යාංශය
කොළඹ 01

நிதி அமைச்சு
கொழும்பு 01

Ministry of Finance
Colombo 01.

## உள்ளடக்கம்

**பக்க இல.**


- தொலை நோக்கு 02
- எமது பணி 02

1 அறிமுகம் 03

2 முக்கிய தொழிற்பாடுகள் 03

3 நிறுவனக் கட்டமைப்பு 04

4 பதவியணி தொடர்பான தகவல்கள் 05

5 மனித வள அபிவிருத்தி 06

6 நிதிச் செயலாற்றுகை 09

7 பௌதிகச் செயலாற்றுகை 11

7.1 காசு முகாமை 11

7.2 பொதுப் படுகடன் முகாமை 21

7.3 வெளிநாட்டு உதவி முகாமை 26

7.4 அரசாங்க வருமானம் 27

7.5 திறைசேரி தனிக் கணக்கு முறைமையின் முன்னேற்றமும் திறைசேரி நிதி முகாமை முறைமை 30

7.6 விவசாய உற்பத்திகளை கொள்வனவு செய்தல் மற்றும் விற்பனை செய்தல் ஆகியவற்றுக்கான சுழற்சி நிதியின் செயற்பாடுகள் 31

## • *தொலை நோக்கு*

"தென்னாசியப் பிராந்தியத்தில் மிகச் சிறந்த அரசாங்க நிதி முகாமையாளராகத் திகழ்தல்"

## • *எமது பணி*

"திரட்டு நிதியத்திற்கும் ஏனைய திறைசேரி நிதியங்களுக்கும் சொந்தமான நிதிகளைக் கையாள்வதில் வினைத்திறனையும் சிக்கனத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்காகவும் வெளிநாட்டுக் கடன்பெறுகைகள் உள்ளிட்ட நிதிக் கணக்கீட்டுக்கு தலைமைத்துவம் வழங்கும் அதவேளை அரசாங்க செலவினங்களை அரசிறைத் திட்டங்கள் மற்றும் கடன்பெறுகை நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஏற்ற வகையில் வரையறுப்பதற்காகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுதல்".


## 1. அறிமுகம்

திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களமானது திரட்டு நிதியம் (திறைசேரி காசுப் பாய்ச்சல்),பொதுப் படுகடன் என்பவற்றின் முகாமையுடன் தொடர்புடைய விடயங்களைக்  கையாள்வதற்கான வினைத்திறன்மிக்க நிறுவனம் ஒன்றை உருவாக்கும் நோக்கில் 2004 ஜூலை 28 ஆந் திகதி தாபிக்கப்பட்டது. இந்நோக்கத்தை நிறைவேற்றும் முயற்சியாக, தேசிய வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்படும் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்களை தொழிற்பாட்டு ரீதியான காசு உட்பாய்ச்சலாகவும் வெளிப்பாய்ச்சலாகவும் மாற்றுதல், அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்ட இலக்குகளை அடையக்கூடியவாறு தேசிய வரவு செலவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கில் வருடாந்த, மாதாந்த, நாளாந்த அடிப்படைகளில் முகாமைத்துவத் திட்டங்களை தயாரித்து வினைத்திறன்மிக்கதும் பயனுறுதிமிக்கதுமான முறையில் அவற்றை முகாமை செய்தல் ஆகிய பணிகளை திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களம் மேற்கொள்கின்றது.

## 2. முக்கிய தொழிற்பாடுகள்

- திறைசேரியின் காசுப் பாய்ச்சல் முகாமை
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்பெறுகைகளுக்கான வசதி ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தல்.
- கொடுப்பனவு முறைகளின் ஊடாக திறைசேரி நிதிகளைப் பகிர்ந்தளித்தல்.
- செலவீட்டு முகவரகங்களுக்கான நிதிகளை மதிப்பீடு செய்தல், முன்னுரிமைப்படுத்தல், விடுவித்தல்.
- திறைசேரி உத்தரவாதங்களை வழங்குதல்
- அரசாங்கத்தின் கடன் வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்களுடன் தொடர்புடைய நிதிப் பாய்ச்சல்களைத் தொழிற்படுத்துதல்.
- வரியல்லாத வருமானங்களை 11 தலைப்புக்களின் கீழும் வரி வருமானங்களை 01 தலைப்பின் கீழும் மதிப்பீடு செய்து, சேகரித்து கணக்கீடுசெய்தல்.
- வெளிநாட்டு உதவிக் கடன்கள் மற்றும் நன்கொடைகளின் கீழான நிதிகளின் விடுவிப்புக்கான ஏற்பாடுகளைச் செய்தல்.
- அரசாங்கத்தின் கடன்பெறுகைகள் மற்றும் படுகடன் மீளளிப்புக்களை கணக்கீடு செய்தல்.
- அரசாங்கத்தின் வங்கிக் கணக்குகளுக்கும் கட்டுநிதிக் கணக்குகளுக்கும் அதிகாரமளித்தலும் அவற்றை  மேற்பார்வை செய்தலும்.
- வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களின் கணக்கீட்டுக்கான வழிகாட்டல்களை வழங்கி மேற்பார்வை செய்து வசதி ஏற்பாடுகளைச் செய்தல்.

## *3. நிறுவனக் கட்டமைப்பு*



## 4. பதவியணி தொடர்பான தகவல்கள்

அட்டவணை 4 (அ) 2014.12.31 ஆந் திகதியில் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை

| பதவி | அனுமதிக்கப்பட்ட பதவியணி | தற்போதுள்ள ஊழியர் தொகை |
|---|---|---|
| பணிப்பாளர் நாயகம் | 1 | 1 |
| மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | 2 | 2 |
| இ.க.சே - வகுப்பு I | 7 | 7 |
| இ.க.சே - வகுப்பு II/III | 9 | 3 |
| இ.நி.சே. - வகுப்பு III | 1 | 1 |
| நிர்வாக உத்தியோகத்தர் | 1 | 1 |
| அபிவிருத்தி உதவியாளர் | 20 | 17 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் - வகுப்பு I/II/III | 55 | 49 |
| தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் உதவியாளர் | 7 | 2 |
| சாரதி | 6 | 6 |
| அலுவலக உதவியாளர் - வகுப்பு I/II/III | 12 | 11 |
| மொத்தம் | 121 | 100 |

## 5.மனித வள அபிவிருத்தி

உரிய விடயப் பரப்புக்களில் ஊழியர்களின் அறிவையும் நிபுணத்துவத்தையும் மேம்படுத்தும் நோக்கில் இத்திணைக்களத்தின் உத்தியோகத்தர்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்கச்செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

### அட்டவணை 5 (அ) உள்நாட்டுப் பயிற்சிகள் 2014

| ஊழியர் வகுதி | பயிற்சிநெறிகளின் எண்ணிக்கை | பயிற்சிபெற்ற உத்தியோகத்தளின் எண்ணிக்கை | பயிற்சித் துறை | இடம் |
|---|---|---|---|---|
| பதவிநிலை உத்தியோகத்தர்கள் | 01 | 02 | உயர் முகாமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | மிலோதா |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 06 | 02 | தாபனவிதிக் கோவை தொடர்பான பயிற்சி | இ.அ.நி.நி |
| | | 02 | பிரதான முகாமைத்துவ உதவியாளர் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி | இ.அ.நி.நி |
| | | 03 | தொழில்சார் முகாமைத்துவ உதவியாளர் உயர் டிப்ளோமா | இ.அ.நி.நி |
| | | 01 | கணனிச் சாரதிச் சான்றிதழ் | இ.அ.நி.நி |
| | | 02 | கணக்கு முறைமைப் பராமரிப்பு தொடர்பான பயிற்சி | SDFL |
| | | 01 | பெறுகை நடைமுறைகள் தொடர்பான பயிற்சி | SDFL |
| அனைத்து | 01 | 16 | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான தமிழ்மொழிப் பாடநெறி | திணைக்களம் |

இவை தவிர, ஊழியர்களிடம் குழு உணர்வைக் கட்டியெழுப்பி மனப்பாங்குகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் 2014 நவம்பர் 23 ஆம் திகதி மத்துகமை குக்குலேகங்கை "லயா லெஷர்" இல் வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சியொன்றும் நடாத்தப்பட்டது. இப்பயிற்சிநெறியானது நடத்தை மாற்றத்திற்கான கோட்பாடுகள், பெறுமானங்கள் மற்றம் புலக்காட்சிகளைக் கொண்டதாக வழிப்படுத்தப்பட்டது. இப்பயிற்சிநெறியானது சுய முன்னேற்றத்திற்கும் ஊழியர் குழாத்தின் அங்கத்தவர்களுக்கு இடையேயான பரஸ்பர தொடர்புகளை விருத்திசெய்வதற்கும் உதவியாக அமைந்தது. இந்நிகழ்ச்சியில் 55 அங்கத்தவர்கள் செயலூக்கத்துடன் பங்கேற்றனர்.

மேலும், இவ்வருடத்தில் 08 பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சிக்கான /மாநாடுகளில் பங்கேற்பதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.

**அட்டவணை 5 (ஆ) 2014 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் பங்கேற்ற மாநாடுகள்**

| | பயிற்சி/கருத்தரங்கு அல்லது மன்றம் | நாடு | காலப் பகுதி | உத்தியோகத்தர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | ஆசிய சந்தை மறுசீரமைப்பு தொடர்பான 14ஆவது வட்டமேசைகலந்துரையாடல் | ஜப்பான் | 13.03.2014<br>14.03.2014 | 01 |
| | படுகடன் ஆர்வலர் மன்றம் | பெல்ஜியம் | 03.04.2014<br>04.04.2014 | 01 |
| | நான்காவது ஆசிய பிராந்திய பொதுப் படுகடன் முகாமை மன்றம் | ஜோர்ஜியா | 23.04.2014<br>25.04.2014 | 01 |
| | நிதி நெருக்கடிகள் தொடர்பான நிபுணர் குழுவுக்கான அரசாங்கங்களுக்கு இடையிலான மன்றம் | நேபாளம் | 19.05.2014<br>23.05.2014 | 01 |
| | தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர்களுக்கான கருத்தரங்கு | சீனா | 06.06.2014<br>26.06.2014 | 01 |
| | அரசாங்க முறி வழங்கலின் படுகடன் முகாமை தொடர்பான கருத்தரங்கு | தாய்லாந்து | 25.06.2014<br>01.08.2014 | 01 |
| | படுகடன் முகாமைச் செயலாற்றுகை மதிப்பீடு | வியட்னாம் | 14.07.2014<br>18.07.2014 | 01 |
| | அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் திறைசேரி முகாமையினை நவீனமயப்படுத்துவது தொடர்பான மன்றம் | சிங்கப்பூர் | 28.07.2014<br>01.08.2014 | 01 |
| | அரச துறை கணக்கீடு தொடர்பான பிராந்திய செயலமர்வு | இந்தோனேசியா | 29.09.2014<br>30.09.2014 | 01 |
| | கணக்கீட்டு மற்றும் அறிக்கை சமர்ப்பித்தலுக்கான சர்வதேசத் தரநியம நிபுணத்துவம் தொடர்பான அரசாங்கங்களுக்கு இடையிலான செயற்பாடு | சுவிட்சர்லாந்து | 12.10.2014<br>20.10.2014 | 01 |

## 5 (இ) சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள்

இத்திணைக்களம் 2014 ஆம் ஆண்டில் பின்வரும் சுற்றறிக்கைகளை வெளியிடுவதன் ஊடாக அறிவுறுத்தல்களை வழங்கி வழிகாட்டியது.

| திகதி | சுற்றறிக்கை இல. | தலைப்பு |
|---|---|---|
| 11.06.2014 | TOD-01-2014 | 2015 ஆம் ஆண்டுக்கான வருமான மதிப்பீடுகள் |
| 20.06.2014 | TOD-02-2014 | வருமானம் நிலுவைகள் கூற்று - 30.06.2014 |
| 13.10.2014 | TOD-03-2014 | 2015 ஆம் ஆண்டுக்கான சம்பளங்கள், சம்பள முற்பணங்கள், ஓய்வூதியங்கள் என்பவற்றைச் செலுத்துதல் |
| 20.11.2014 | TOD-04-2014 | 2014 ஆம் ஆண்டுக்கான காசேடுகளை முடிவுறுத்துதல் மற்றும் கட்டுநிதிக் கணக்குகளைத் தீர்த்தலும் |
| 03.12.2014 | TOD-05-2014 | 2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் செய்யப்பட்ட ஏற்பாடுகளின் மேற்கொள்ளப்படவுள்ள செலவினங்களுக்கான வருடாந்த கட்டுநிதி வரையறைகளைத் தீர்மானித்தல் |
| 23.12.2014 | TOD-03(I)-2014 | 2013 ஜனவரி மாதத்தில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான சம்பளத் திகதியை முற்படுத்துதல் |
| 31.12.2014 | TOD-06-2014 | வருமான நிலுவைகள் கூற்று - 31 12 2014 |

## அட்டவணை 6. (அ) மீளெழும் செலவின நிதிச் செயலாற்றுகை - 2014

Rs. '000

| விடயம் | வகை/ பொருள்/ விடயம்/ விபரம் | 2013 | | 2014 | | 2013 ஆம் ஆண்டின் செலவினங்களுடன் ஒப்பிடுகையில் அதிகரிப்பு/ | 2013 ஆம் ஆண்டின் செலவினத்தின் அடிப்படையில் அதிகரிப்பு/ |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீடு | உண்மை | மதிப்பீடு | உண்மை | | |
| | மீளெழும் செலவினங்கள் | 955,300 | 955,279 | 3,971,643 | 3,891,932 | 2,936,653 | 307.41 |
| | **ஆள்சார் வேதனாதிகள்** | **37,298** | **37,289** | **40,410** | **40,102** | **2,813** | **7.54** |
| 1001 | சம்பளங்கள் மற்றும் படிகள் | 24,251 | 24,249 | 24,500 | 24,214 | (35) | (0.14) |
| 1002 | மேலதிக நேர, விடுமுறைக் காலக் கொடுப்பனவுகள் | 501 | 500 | 510 | 508 | 8 | 1.60 |
| 1003 | ஏனைய படிகள் | 12,546 | 12,540 | 15,400 | 15,380 | 2,840 | 22.65 |
| | **பிரயாணச் செலவுகள்** | **1,403** | **1,397** | **1,370** | **1,365** | **(32)** | **(2.29)** |
| 1101 | உள்நாட்டு | 65 | 64 | 70 | 69 | 5 | 7.81 |
| 1102 | வெளிநாட்டு | 1,338 | 1,333 | 1,300 | 1,296 | (37) | (2.78) |
| | **வழங்கல்கள்** | **3,474** | **3,473** | **3,203** | **3,198** | **(275)** | **(7.92)** |
| 1201 | எழுதுபொருட்கள் மற்றும் அலுவலகத் தேவைகள் | 1,635 | 1,634 | 1,010 | 1,010 | (624) | (38.19) |
| 1202 | எரிபொருள் | 1,771 | 1,771 | 2,125 | 2,120 | 349 | 19.71 |
| 1203 | உணவு மற்றும் சீருடைகள் | 68 | 68 | 68 | 68 | - | - |
| | **பராமரிப்புச் செலவுகள்** | **1,527** | **1,525** | **1,278** | **1,267** | **(258)** | **(16.92)** |
| 1301 | வாகனங்கள் | 1,233 | 1,232 | 1,000 | 992 | (240) | (19.48) |
| 1302 | பொறித்தொகுதி, இயந்திரங்கள், உபகரணங்கள் | 273 | 272 | 210 | 210 | (62) | (22.79) |
| 1303 | கட்ட்டங்கள் மற்றும் கட்டமைப்பக்கள் | 21 | 21 | 68 | 65 | 44 | 209.52 |
| | **சேவைகள்** | **2,352** | **2,350** | **2,344** | **2,337** | **(13)** | **(0.55)** |
| 1401 | போக்குவரத்து | 1,012 | 1,011 | 860 | 854 | (157) | (15.53) |
| 1402 | தபால் மற்றும் தொடர்பாடல் | 1,294 | 1,294 | 1,410 | 1,410 | 116 | 8.96 |
| 1405 | ஏனையவை | 46 | 45 | 74 | 73 | 28 | 62.22 |
| | **மாற்றல்கள்** | **909,246** | **909,245** | **3,923,038** | **3,843,663** | **2,934,418** | **322.73** |
| 1503-01 | வருமானங்களின் மீளளிப்பு லொத்தர் அபிவிருத்தி மானியம் | 498,374 | 498,373 | 499,363 | 420,012 | (78,361) | (15.72) |
| 1504 | அபிவிருத்தி மானியங்கள் - மண்ணெண்ணெய் மானியம் CPL | - | - | 3,022,775 | 3,022,775 | 3,022,775 | |
| 1505-01 | திட்டத்திற்கான அரசாங்கத்தின் பங்களிப்பு | 410,000 | 410,000 | 400,000 | 400,000 | (10,000) | (2.44) |
| 1506 | உத்தியோகத்தர்களுக்கான சொத்துக் கடன் வட்டி | 872 | 872 | 900 | 876 | 4 | 0.46 |

| விடயம் | வகை/ பொருள்/ விடயம்/ விபரம் | 2013 | | 2014 | | 2013 ஆம் ஆண்டின் செலவினத்துடன் ஒப்பிடுகயில் அதிகரிப்பு/ வீழ்ச்சி | 2013 ஆம் ஆண்டின் செலவுகளின் அடிப்படையில் அதிகரிப்பு/ வீழ்ச்சி % |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீடு | உண்மை | மதிப்பீடு | உண்மை | | |
| | மூலதனச் செலவுகள் | 506,800 | 502,334 | 6,892 | 6,460 | (495,874) | (98.71) |
| | **மூலதனச் சொத்துக்களுக்கான புனரமைப்பு மற்றும் மேம்பாடு** | **3,000** | **1,491** | **3,242** | **2,955** | **1,464** | **98.19** |
| 2001 | கட்டிடப் புனரமைப்பு மற்றும் மேம்பாடு | 1,100 | 209 | 1,300 | 1,217 | 1,008 | 482.30 |
| 2002-1 | திறைசேரித் தனிக் கணக்குகள் முறைமை அமுலாக்கம் | 1,000 | 981 | 1,000 | 812 | (169) | (17.23) |
| 2002-2 | ஏனையவை | 100 | 98 | 142 | 140 | 42 | 42.86 |
| 2003 | வாகனங்கள் | 800 | 203 | 800 | 786 | 583 | 287.19 |
| | **மூலதனச் சொத்துக்களின் கொள்ளல்** | **3,200** | **271** | **3,000** | **2,999** | **2,728** | **1,006.64** |
| 2102 | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 3,200 | 271 | 3,000 | 2,999 | 2,728 | 1,006.64 |
| | **நிதிச் சொத்துக்களின் கொள்ளல்** | **500,000** | **500,000** | **-** | **-** | **(500,000)** | **(100.00)** |
| 2302-05 | விவசாயிகளின் உற்பத்திகளைக் கொள்வனவு செய்வதற்குப் | 500,000 | 500,000 | - | - | (500,000) | (100.00) |
| | **மனித வள அபிவிருத்தி** | **600** | **572** | **650** | **506** | **(66)** | **(11.54)** |
| 2401 | பயிற்சி மற்றும் திறன் விருத்தி | 600 | 572 | 650 | 506 | (66) | (11.54) |
| | | | | | | | |
| | | | | | | | |

# 7. பௌதிகச் செயலாற்றுகை

## 7.1 காசுமுகாமை

### 7.1.1 திறைசேரி காசுப் பாய்ச்சல் முகாமை

திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களமானது வரவுசெலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட கொள்கை இலக்குகளை அடைவதற்காக அரசாங்க நிதியை வினைத்திறன்மிக்க முறையில முகாமை செய்து கடன்பெறுகைச் செலவுகளைக் குறைப்பதற்காக 2014 ஆம் ஆண்டில் வினைத்திறன்மிக்க காசுத் திட்டமிடல் மற்றும் முகாமை உபாயமொன்றைப் பின்பற்றியது. இக்குறிக்கோள்களை அடையப் பெறுவதற்காக செலவீட்டு முகவரகங்களுக்கு (அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள்) உரிய காலங்களில் முன்னுரிமை அடிப்படையில் நிதியினை விடுவிப்பது திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களத்தின் அடிப்படையான பொறுப்புக்களில் ஒன்றாகும். கிடைக்கக்கூடிய நிதிகளை விட பணத்துக்கான கேள்வி எப்போதும் அதிகமாகக் காணப்படுகின்றது என்பதே திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களத்தின் பொதுவான அனுபவமாக இருந்தது. அதனால், வரவுசெலவுத் திட்டத்தை சுமுகமான முறையில் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நிதிகளை விடுவிக்கும் நோக்கில் ஒவ்வொரு செலவீட்டு முகவரகத்தினதும் காசுத் தேவைகளை மதிப்பீடு செய்வது இத்திணைக்களத்தின் பிரதான பொறுப்புக்களில் ஒன்றாகக் காணப்பட்டது.

திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களம் 2014 ஆம் ஆண்டில் கைக்கொண்ட காசுப் பாய்ச்சல் முகாமை உபாயமானது படுகடன் கடப்பாடுகள் திரட்சியடைவதன் அழுத்தத்தைக் குறைத்தது. அதன் மூலம் பொதுப் படுகடன் மீள்நிதியீட்ட அபாயம் குறைக்கப்பட்டு உள்நாட்டு வட்டி வீதங்கள் மீதான அழுத்தமும் குறைக்கப்பட்டது. இந்த உபாயத்தின் கீழ், திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களம் எதிர்பார்க்கப்படும் மொத்தக் காசு உட்பாய்ச்சல், வரையறைகள், காசு வெளிப்பாய்ச்சல் மற்றும் கடன்பெறுகைக் காலங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு மாதாந்த தொழிற்பாட்டு காசு முகாமைத் திட்டமொன்றைத் தயாரித்தது. இந்த மாதாந்தத் திட்டமானது வருடாந்த காசுத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கு அமைவாக, எதிர்பார்க்கப்படும் கடன்கள், காசு வெளிப்பாய்ச்சல் மற்றும் திட்டமிடப்பட்ட கடன்பெறுகைகள் என்பவற்றைக் கொண்டதாகத் தயாரிக்கப்பட்டது.

உள்நாட்டு இறைவரி, சுங்கம், மதுவரி ஆகிய திணைக்களங்களால் சமர்ப்பிக்கப்பட்ட எதிர்வுகூறல்கள், எதிர்பார்க்கப்படும் வரி மற்றும் வரியல்லா வருமானப் பெறுகைகள் மற்றும் செலவினங்கள் அவற்றின் மாதாந்தப் போக்குகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வருடாந்த மற்றும் மாதாந்தக் காசுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்பட்ட தொழிற்பாட்டுக் காசுப் பாய்ச்சல்களின் ஊடாக வினைத்திறன்மிக்க செலவின முகாமை, முன்னேற்றகரமான வருமானம் சேகரிப்பு என்பவற்றுடன் தொடர்புடைய கொள்கைசார் விடயங்கள் தொடர்பான பொருத்தமான தீர்மானங்களை எடுப்பதில் திறைசேரித் தொழிற்பாட்டுத் திணைக்களம் சிறந்த பங்களிப்பை வழங்கியது.

திறைசேரியின் காசு முகாமைக்கான வருடாந்த வரவு செலவுத் திட்ட இலக்குகளை அடைவதற்கான செயன்முறைக்குத் தேவைப்படுகின்ற தீர்மானங்களை எடுப்பதற்கான உரிய நேரத்திலான அறிவுறுத்தல்கள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக, காசுப் பாய்ச்சல் கூட்டங்களில், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கைச் சுங்கம், மதுவரித் திணைக்களம் என்பன போன்ற முக்கியமான வருமானம் சேகரிக்கும் திணைக்களங்களின் தலைவர்களும் தொடர்புடைய திறைசேரித் திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் பிரதித் தலைவர்களும் திறைசேரியின் செயலாளருடன் பங்கேற்றனர். தேவையானவாறு காலத்துக் காலம் மாற்றங்களைச் செய்வதன் ஊடாகக் கொள்கைகள் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்படுவதற்கு தொடர்ச்சியான மேற்பார்வை உதவியாக அமைகின்றது. மேலும் அது எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகளை அளவிடுவதற்கும் உதவும்.

முன்னைய வருடங்களைப் போன்று இவ்வருடத்திலும் வருமானத்திற்கும் செலவினங்களுக்கும் இடையிலான இடைவெளி கடன்பெறுகையின் மூலம் நிரப்பப்பட்டது. எவ்வாறாயினும், திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களத்தைப் பொறுத்தவரையில், அதன் குறிக்கோள்களை அடைவதில் 2014 ஆம் ஆண்டு சவால்கள் நிறைந்த ஒரு வருடமாகக் காணப்பட்டது. திட்டமிட்டவாறு வருமான இலக்குகள் அடையப்படாத போதிலும், வட்டிக்கான செலவினம் அதிகரித்த போதிலும், திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் படுகடன் திணைக்களத்தின் உதவியுடன் 2014 ஆம் ஆண்டில் எதிர்நோக்கிய சவால்களை நியாயமான முறையில் தீர்த்தது. இவ்வாறு முகங்கொடுத்த சவால்களில் பின்வருவன முக்கியமானவையாகும்.

1. இலங்கை மத்திய வங்கியினால் அடையப்பெற வேண்டிய காலாண்டுக்கான பொருளாதார இலக்குகளுக்குப் பாதகம் ஏற்படாத விதத்தில் திறைசேரியின் காசு முகாமையை உறுதிப்படுத்துதல்.
2. அரசாங்க முதலீட்டுநிகழ்ச்சித்திட்டத்தை திட்டமிட்டவாறு நடைமுறைப்படுத்துதல்.
3. தனியார்துறையின் கடன் தேவைகளுக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தாத விதத்தில் உள்நாட்டு நிதியீட்ட மூலங்களைப் பயன்படுத்துதல்.
4. சர்வதேச மூலதனச் சந்தையிலிருந்து குறைந்த செலவில் படுகடன்களைப் பெறுவதற்குச் சிபாரிசு செய்தல்.
5. எதிர்பார்க்கப்படும் அரசாங்க முதலீட்டு இலக்குகளை அடையப்பெறுவதற்காக மாதாந்த உள்நாட்டுப் படுகடன் முகாமைக் குழுக் (DDMC) கூட்டங்களில் கடன்பெறுகைகளைச் சிபாரிசு செய்தல்.


### *7.1.2 திறைசேரி காசு உட்பாய்ச்சல்*

*அட்டவணை 7.1 (அ) வருமானம் சேகரிப்பு - 2014*

(ரூபா.மில்லியன்)

| | **மதிப்பீடு** | **உண்மையான** | **%** |
|---|---|---|---|
| வரி வருமானம் | 1,158,000 | 987,712 | 85 |
| வரியல்லா வருமானம் | 92,261 | 97,237 | 105 |
| நன்கொடை | 13,701 | 2,495 | 18 |
| **மொத்த வருமானம்** | 1,263,962 | 1,087,444 | 86 |


**வரைபு 7.1 (அ) மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மை வருமானம் 2014**



**அட்டவணை 7.1 (அ) வருமானம் சேகரிப்பு - *2009 முதல் 2014*ரூபா (மில்)**

| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|---|
| வரி வருமானம் | 596,762 | 721,818 | 795,696 | 833,520 | 920,225 | 987,712 |
| வரியல்லா வருமானம் | 68,142 | 72,122 | 86,586 | 124,359 | 102,447 | 97,237 |
| நன்கொடை | 8,054 | 5,319 | 3,267 | 3,171 | 2,307 | 2,495 |

**வரைபு 7.1 (ஆ) அரசாங்க வருமானத்தின் போக்கு 2009-2014**




அட்டவணை 7.1 (அ) மற்றும் வரைபு 7.1 (அ) என்பவற்றில் காட்டப்பட்டுள்ளது போன்று 2014 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 86 சதவீதமாகக் காணப்பட்டது. மதிப்பிடப்பட்ட மொத்த வரி வருமானத்தில் 85 சதவீதம் வரி வருமானமாகவும், 105 சதவீதம் வரியல்லா வருமானமாகவும் 18 சதவீதம் வெளிநாட்டு நன்கொடையாகவும் இது அமைந்திருந்தது.

வருமானச் சேகரிப்புக் கண்காணிப்பைப் பலப்படுத்தியதன் மூலம் 2014 ஆம் ஆண்டில் திறைசேரியினால் 987,712 மில்லியன் ரூபாவை வரி வருமானமாகச் சேகரிக்க முடிந்தது. இது 2013 ஆம் ஆண்டில் சேரிக்கப்பட்ட வரி வருமானமான ரூபா 920,225 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 7 சதவீத அதிகரிப்பாகும். இந்த வரி வருமான அதிகரிப்புக்கு பெறுமதி சேர் வரி, நாட்டைக் கட்டியெழுப்பும் வரி, மோட்டார் வாகனங்களுக்கான இறக்குமதித் தீர்வைகள் என்பன பிரதானமாகப் பங்களிப்புச் செய்தன. வெளிநாட்டு உதவிகள் மூலமான காசு உட்பாய்ச்சல் சிறிதளவில் 8 சதவீதத்தால் அதிகரித்து 2,495 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இந்த வகையில், 2014 ஆம் ஆண்டில் மொத்த வருமானத்தில் 91 சதவீதம் வரி வருமானமாகக் காணப்பட்டது. மீதி 9 சதவீதம் வரியல்லா வருமான மற்றும் மானியங்களின் மூலம் பெறப்பட்டது.

### *7.1.3 திறைசேரி காசு வெளிப்பாய்ச்சல்*

திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களமானது அரசாங்கத்தின் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்துக்கு உதவியாக அமையும் விதத்தில் மூலதனச் செலவினங்களை தேவையான மட்டத்தில் பேணி வருவதற்கான அரசாங்கத்தின் முயற்சிக்கும் பங்களிப்புச் செய்தது.

வருமானத்துக்குப் பொருத்தமான முறையில் இச்செலவினங்களை அமைப்பது இத்திணைக்களத்தின் சவால்மிக்க பணிகளில் ஒன்றாகக் காணப்பட்டது. 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு வகைக்குமான கட்டுநிதிப் பகிர்வை அட்டவணை 7.1 (இ) காட்டுகின்றது.

**அட்டவணை - 7.1 (இ) செலவீட்டு வகைகளின் அடிப்படையில் கட்டுநிதியின் பரம்பல்**

**ரூபா.மில்லியன்**

| | 2013 | 2014 |
|---|---|---|
| **ஆள்சார் வேதனாதிகளுக்கு** | 425,448 | 475,752 |
| **ஓய்வூதியங்களுக்கு** | 116,591 | 121,603 |
| **சமுர்த்தி/உர மானியக் கொடுப்பனவுகளுக்காக** | 28,091 | 46,797 |
| **ஏனைய மீளெழும் செலவினங்களுக்காக** | 159,896 | 235,910 |
| **வட்டிக் கொடுப்பனவுகளுக்காக** | 469,928 | 449826 |
| **படுகடன் மீளச்செலுத்தல்களுக்காக** | 709,956 | 627,045 |
| **மூலதன செலவுகளுக்காக** | 267,039 | 377569 |

2014 ஆம் ஆண்டில் மீளெழும் செலவினங்களுக்காக மொத்தமாக ரூபா 1,329,888 மில்லியன் கட்டுநிதி விடுவிக்கப்பட்டது. இது முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 11 சதவீத அதிகரிப்பாகும்.


### *7.1.4 காசு வரையறைகள் மற்றும் விடுவிப்புக்களின் உள்ளடக்கம்*

திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களத்தின் காசு முகாமைப் பிரிவு பின்வரும் ஐந்து துறைகளைக் கொண்டதாக அமைந்துள்ளது.

1. உட்கட்டமைப்பு அபிவிருத்தித் துறை (IDS)
2. மனித வள அபிவிருத்தித் துறை (HRD)
3. உண்மைப் பொருளாதாரம் மற்றும் நிதித் துறை (REF)
4. பாதுகாப்புத் துறை (DEF)
5. நிர்வாகத் துறை (GOV)

மூலதனச் செலவினங்களுக்காக 2014 ஆம் ஆண்டில் விடுவிக்கப்பட்ட கட்டுநிதி ரூபா 377,569 மில்லியனாகக் காணப்பட்டது. மூலதனச் செலவினங்களுக்கான கட்டுநிதி விடுவிப்புக்கள் வீதிகள், மனித வளங்கள், போக்குவரத்து, மின் உற்பத்தி, நீர்வ வழங்கல், துறைமுகங்கள், விமான நிலையங்கள், நீர்ப்பாசனம் போன்ற நாட்டின் தேசிய உட்கட்டமைப்பு அபிவிருத்திகளின்மேம்பாட்டுக்காகவும் கிராமியப் பொருளாதாரத்தைத் தரமுயர்த்துவதற்காகவும் பயன்படுத்தப்பட்டன.

*வரைபு 7.1 (இ) வருடாந்த காசு வரையறை மற்றும் காசு விடுவிப்புக்கள் - 2014*




**அட்டவணை 7.1 (ஈ) வருடாந்த காசு வரையறை மற்றும் காசு விடுவிப்புக்கள் - 2014**

**ரூபா(மில்)**

| | உட்கட்டமைப்பு அபிவிருத்தித் துறை | மனித வள அபிவிருத்தி | மீளெழும் செலவுகள் | பாதுகாப்புத் துறை | நிர்வாகத் துறை |
|---|---|---|---|---|---|
| வரையறை | 164,225 | 225,056 | 190,327 | 331,947 | 497,734 |
| விடுவிப்புக்கள் | 96,431 | 208,814 | 143,396 | 310,505 | 391,075 |
| விடுவிப்புச் சதவீதம் | 59% | 93% | 75% | 94% | 79% |

இந்த 5 துறைகளிலுமுள்ள ஒவ்வொரு திணைக்களத்தினதும் அமைச்சுகளினதும் தேவைகளின் அடிப்படையில் 2014 ஆம் ஆண்டில் திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் விடுவிக்கப்பட்ட நிதிகள் பற்றிய விபரங்கள் அட்டவணை 7.1 (ஈ) இல் காட்டப்பட்டுள்ளன. இக்காலப்பகுதியில் திறைசேரியானது பாதுகாப்பு,மனித வள அபிவிருத்தித் துறைகளுக்கான வரையறைகளில் 93 சதவீதத்துக்கும் மேற்பட்ட அளவு நிதிகளை விடுவித்தது. நிர்வாகம், உண்மைப் பொருளாதாரத் துறை, உட்கட்டமைப்பு அபிவிருத்தித் துறை என்பவற்றுக்கு முறையே 79% ,75% , 59% நிதி விடுவிக்கப்பட்டது. வரைபு 7.1 (இ) வருடாந்த கட்டுநிதி வரையறையுடன் 2015 ஆம் ஆண்டில் விடுவிக்கப்பட்ட தொகைகளை விளக்குகின்றது.

**அட்டவணை 7.1 (உ) மீளெழும் மற்றும் மூலதனச் செலவினங்கள், கட்டுநிதி வரையறைகள் என்பவற்றின் துறைவாரியான விபரங்கள்**


(ரூபா. மில்லியன்)

| துறைகள் | மீளெழும் | | | மூலதனம்* | | |
|---|---|---|---|---|---|---|
| | கட்டுநிதி வரையறை | கட்டுநிதி விடுவிப்புக்கள் | % | கட்டுநிதி வரையறை | கட்டுநிதி விடுவிப்புக்கள் | % |
| உட்கட்டமைப்பு அபிவிருத்தித் துறை | 26,924 | 20,718 | 77 | 135,872 | 75,458 | 56 |
| மனித வள அபிவிருத்தி | 161,217 | 158,171 | 98 | 61,629 | 49,131 | 80 |
| மீளெழும் செலவுகள் | 91,039 | 74,767 | 82 | 96,522 | 68,224 | 71 |
| பாதுகாப்புத் துறை | 291,821 | 278,699 | 96 | 36,266 | 28,905 | 82 |
| நிர்வாகத் துறை | 375,428 | 309,043 | 82 | 120,768 | 81,531 | 68 |
| **மொத்தம்** | **945,710** | **841,398** | 89 | **450,191** | **303,249** | 67 |

***அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் நீங்கலாக**


*வரைபு 7.1 (ஈ)*

***மீளெழும் செலவுகளுக்கான வரையறைகள் மற்றும் நிதி விடுவிப்புக்கள் - 2014***




*வரைபு 7.1 (உ)*

***மூலதனச் செலவுகளுக்கான வரையறைகள் மற்றும் நிதி விடுவிப்புக்கள் - 2014***




அட்டவணை 7.1 (உ) விலும் வரைபு 7.1 (ஈ)யிலும் காட்டப்பட்டுள்ளது போன்று செலவு முகவரகங்களின் மீளெழும் செலவுகள் திருப்திகரமான முறையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. வேறு விதத்தில் கூறுவதாயின், வருடாந்த வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட மொத்த காசு வரையறையில் இது 89 சதவீதமாகும். மனித வள அபிவிருத்தி, பாதுகாப்பு ஆகிய துறைகள் மீளெழும் செலவுகளின் கீழ் 9 **8**சதவீதத்தை விட அதிகமான பகுதியைக் கொண்டிருந்தன.


மூலதனச் செலவினங்களைப் பொறுத்த வரையில், காசு வரையறையில் 67 சதவீதத்தை திறைசேரியினால் விடுவிக்க முடிந்தது. இது கடந்த வருடத்தில் 65 சதவீதமாகக் காணப்பட்டது. கட்டுநிதி வரையறையில் 82 சதவீதம் வரையான மூலதனச் செலவினம் பாதுகாப்புத் துறைக்காக விடுவிக்கப்பட்டது.


### *7.1.5 காசு வரையறைகளின் துறைவாரியான உள்ளடக்கம் மற்றும் உண்மையான விடுவிப்புக்கள்*


வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்கின்ற போது வளங்களை ஒதுக்கீடு செய்வதில் பொருளாதாரத்தின் முக்கிய துறைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது. பொதுத் திறைசேரியின் வரவு செலவுத் திட்ட அமுலாக்கல் பிரிவான திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களம் நிதிகளை விடுவிக்கின்ற போது அதே முக்கியத்துவத்தையும் முன்னுரிமையையும் வழங்க வேண்டியுள்ளது. வரைபு 7.1 (ஊ) இல் காட்டப்பட்டுள்ள உள்ளடக்கங்களுக்கு இணங்க திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களம் வழங்கப்பட்டுள்ள முன்னுரிமைகளை உண்மைப்படுத்தும் விதத்தில் மீளெழும் செலவுகள், மூலதனச் செலவினங்கள், அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் என்பவற்றுக்கான நிதிகளை விடுவித்தது.


***வரைபு 7.1 (ஊ) காசு வரையறைகளின் துறைவாரியான உள்ளடக்கம் விடுவிப்புக்கள் - 2014***




## 7.2 பொதுப் படுகடன் முகாமை

### 7.2.1 அரசாங்கத்தின் கடன்பெறுகை நிகழ்ச்சித் திட்டம்– 2014

2013 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டுக்கான வள இடைவெளிக்கு நிதியீட்டம் செய்வதற்காக அதிகபட்சமாக மொத்தம் 1,278 பில்லியன் ரூபாவைக் கடனாகப் பெறுவதற்கு இலங்கைப் பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்கியது. எவ்வாறாயினும், பொதுத் தொழில்முயற்சிகளின் ஐந்தொகைகளுக்கு மூலதனவாக்கம் செய்து மீள்கட்டமைப்பதற்காக வழங்கப்பட்ட முறிகளையும் உள்ளடக்கக் கூடிய விதத்தில் இந்த வரையறை பின்னர் 2014 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் ஊடாக 1,478 பில்லியன் ரூபா வரை அதிகரிக்கப்பட்டது.


இவ்வருடத்தில் வள இடைவெளிக்கு நிதியீட்டம் செய்வதற்கு அரசாங்கம் பாரியளவில் உள்நாட்டு மூலங்களை நம்பியிருந்தது. இந்த வகையில், 2013 ஆம் ஆண்டில் உள்நாட்டுக் கடன்களில் 87.75 சதவீதமாகக் காணப்பட்டு 70.34 சதவீதமாகக் குறைவடைந்த வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா பெறுமதியிடப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் உள்நாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்ட மொத்தக் கடன்கள் என்பன உள்ளிட்ட மொத்த கடன்பெறுகை 1,001.9 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட அதேவேளை வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்ட தொகை 422.5 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இது மொத்தப் பெறுகையில் 29.66 சதவீதமாகும்.

சாத்தியமான வரை குறைந்த செலவில் கடன்களைப் பெறுவது என்ற அரசாங்கத்தின் படுகடன் முகாமை உபாயத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அதிக செலவு கொண்ட குறுகிய காலத்தில் முதிர்ச்சியடையும் படுகடன் பிணையங்களுக்குப் பதிலாக நீண்ட முதிர்வுக் காலத்தைக் கொண்ட திறைசேரி முறிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதனால், உள்நாட்டுக் கடன்களில் பெறும் பகுதி திறைசேரி முறிகளை வழங்குவதன் ஊடாகப் பெறப்பட்டுள்ளது. அது 2013 ஆம் ஆண்டின் 802.4 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 6.9 சதவீதத்தால் அதிகரித்து 857.6 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.

2013 ஆம் ஆண்டில் 237.9 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிப் பெறுமதியிடப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகள், 2014 ஆம் ஆண்டில் 60 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 95.5 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட அதேவேளை 2013 ஆம் ஆண்டில் 46.78 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட திறைசேரி முறிகளின் விநியோகம் 2014 ஆம் ஆண்டில் 74.78 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 11.8 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.

### 7.2.2 தேறிய உள்நாட்டு நிதியீட்டம்

2014 ஆம் ஆண்டில் 591.2 பில்லியன் ரூபா வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறைக்கு நிதியீட்டம் செய்வதற்காக உள்நாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்ட மொத்தத் தேறிய கடன்கள் 379 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இது வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையில் 64 சதவீதமாகும். சந்தைப்படுத்தக்கூடிய சாதனங்களில் கவனம் செலுத்துவது என்ற அரசாங்கத்தின் உபாயத்திற்கு இணங்க 2014 ஆம் ஆண்டில் பற்றாக்குறைக்கு நிதியீட்டம் செய்வதற்காக சந்தைப்படுத்தக்கூடிய படுகடன் சாதனங்கள் மூலம் பெறப்பட்ட மொத்தத் தேறிய கடன்பெறுகை 416.2 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட அதேவேளை சந்தைப்படுத்த முடியாத படுகடன் மீளளிப்புக்கள் 37.5 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.




தேறிய உள்நாட்டு நிதியீட்டம் பிரதானமாக, திறைசேரி முறிகள், திறைசேரி உண்டியல்கள், இலங்கை அபிவிருத்தி முறிகள் என்பன போன்ற சந்தைப்படுத்தக்கூடிய படுகடன் சாதனங்களை உள்ளடக்கியதாக உள்ளது. 2014 ஆம் ஆண்டில் பெறப்பட்ட மொத்தச் சந்தைப்படுத்தக்கூடிய கடன்பெறுகைகளில், வதியாதோரினால் திறைசேரி முறிகளில் செய்யப்பட்ட தேறிய முதலீடான 15 பில்லியன் ரூபா நீங்கலாக, 369.1 பில்லியன் ரூபா அல்லது 97.5 சதவீதம் திறைசேரி முறிகளின் ஊடாகப் பெறப்பட்டிருந்தது.

அட்டவணை 7.2 (அ) **அரசாங்க கடன்பெறுகை வரையறைகள் மற்றும் பயன்பாடு (ரூபா மில்லியன்)**

| | 2013 | | 2014 | |
|---|---|---|---|---|
| **விடயம்** | **அனுமதிக்கப்பட்ட வரையறை** | **பயன்பாடு** | **அனுமதிக்கப்பட்ட வரையறை** | **பயன்பாடு** |
| **மொத்தக் கடன்பெறுகைகள்** | **1,303,000** | **1,286,013** | **1,478,000** | **1,442,506** |
| உள்நாட்டு | 1,069,000 | 1,102,696 | 1,146,500 | 1,001,968 |
| வெளிநாட்டு | 234,000 | 183,317 | 331,500 | 422,538 |
| **மொத்த நிதியீட்டம்** | **1,303,000** | **1,286,013** | **1,478,000** | **1,424,506** |

*மூலங்கள்: திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கி*

திறைசேரி உண்டியல்கள் மூலமான தேறிய பெறுகைகள் 26.1 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இது தேறிய உள்நாட்டு நிதியீட்டத்தில் 6.9 சதவீதமாகும். 2013 ஆம் ஆண்டில் 140.3 பில்லியனாகக் காணப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகள் மூலமான தேறிய கடன்பெறுகைகள் 21.0 பில்லியன் ரூபாவாக வீழ்ச்சியடைந்து தேறிய உள்நாட்டு நிதியீட்டத்தில் 5.5 சதவீதமாகக் காணப்பட்டது. 2014 ஆம் ஆண்டில் சந்தைப்படுத்த முடியாத பெறுகைகளுக்காக 37.5 பில்லியன் ரூபா மீளளிப்புச் செய்யப்பட்டது.

### 7.2.3.1 நிலுவையாகவுள்ள உள்நாட்டுப் படுகடன்

2014 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மொத்த உள்நாட்டுப் படுகடனில் திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களின் பங்கு முறையே 66.4 மற்றும் 16.2 சதவீதங்களாகக் காணப்பட்டன. மீதமாகவுள்ள படுகடன்களில் இலங்கை அபிவிருத்தி முறிகள் (9.1 சதவீதம்) மத்திய வங்கியின் தற்காலிக முற்பணங்கள (3.4 சதவீதம்) ரூபாக் கடன்கள் (1.3 சதவீதம்) ஏனைய கடன்கள் (3.6 சதவீதம்) என்பன உள்ளடங்குகின்றன.

2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014 ஆம் ஆண்டில் திறைசேரி முறிகளின் கையிருப்பு 15.9 சதவீதத்தால் அதிகரித்து ரூபா 2,844 பில்லியனாகக் காணப்பட்ட அதேவேளை திறைசேரி உண்டியல்களின் கையிருப்புப் பெறுமதி 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 0.8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 694.8 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. வழங்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகளின் பெறுமதி 2014 ஆம் ஆண்டின் இறுதியில் 5.9 சதவீதத்தால் அதிகரித்து 391 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.

### 7.2.3.2 உள்நாட்டுப் படுகடன்களின் மூதிர்வுக் கட்டமைப்பு

2014 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான நடுத்தர மற்றும் நீண்ட காலப் படுகடன்கள், மொத்த உள்நாட்டுப் படுகடன்களில் 78 சதவீதமாகக் காணப்பட்டன. இது 2013 ஆம் ஆண்டின் 76.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் சிறிதளவில் அதிகரித்து 3,336.6 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.

மொத்த திறைசேரி முறிகளின் பெறுமதி 2,844.5 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இது மொத்த நடுத்தர மற்றும் நீண்ட காலப் படுகடனில் 85.2 சதவீதமாகும். எஞ்சிய பகுதியில் இலங்கை அபிவிருத்தி முறிகள் (11.7 சதவீதம்), ரூபாக் கடன்கள் (1.7 சதவீதம்) ஏனைய கடன்கள் (1.4 சதவீதம்) என்பன உள்ளடங்கியிருந்தன. அரசாங்கத்தின் கடன்பெறுகைச் செயற்பாடானது நடுத்தர மற்றும் நீண்ட காலச் சாதனங்களை நோக்கிக் குவிக்கப்பட்டமையானது 2014 ஆம் ஆண்டில் அரசாங்கம் தனது பயன் வளைகோட்டை விரிவுபடுத்துவதற்கு உதவியது.

நிலுவையாகவுள்ள மொத்த உள்நாட்டுப் படுகடனில் ஒரு வருடத்தை விடக் குறைந்த முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட குறுகிய காலப் படுகடன்களின் பெறுமதி 2014 ஆம் ஆண்டின் இறுதியில் 941.2 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. 2013 ஆம் ஆண்டின் 909.2 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் இது 32 பில்லியன் ரூபா அதிகரிப்பாகும். அரசாங்கத்தின் மொத்தக் குறுகிய காலப் படுகடனில் திறைசேரி உண்டியல்கள் 73.8 சதவீதம் என்ற அளவில் தொடர்ந்து அதிக பங்கைக் கொண்டிருந்தது.

நடுத்தரக் காலப் படுகடன் முகாமை உபாயத்துக்கு இணங்கிய வகையில் நீண்ட கால பிணையங்கள் விநியோகிக்கப்பட்டமையினால் 2013 ஆம் ஆண்டில் 4.8 வருடங்களாகக் காணப்பட்ட சராசரி முதிர்வுக் காலம் 2014 ஆம் ஆண்டில் 5.74 சதவீதமாக அதிகரித்தது.

## அட்டவணை 7.2.(அ) 2014 ஆம் ஆண்டின் இறுதியில் முடிவடைந்த வருடத்திற்கான உள்நாட்டுப் படுகடன்களின் முதிர்வுக் கட்டமைப்பு

| | சாதனம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| முதிர்ச்சியடையும் வருடம் | திறைசேரி உண்டியல்கள் | திறைசேரி முறிகள் | ரூபாக் கடன்கள் | இலங்கை அபிவிருத்தி முறிகள் | மொத்தம் | முதிர்ச்சி மொத்தப் பெறுமதியின் % ஆக |
| 2015 | 750,267 | 511,705 | 31,430 | 93,774 | 1,387,176 | 31 |
| 2016 | - | 299,986 | - | 78,252 | 378,238 | 8 |
| 2017 | - | 380,764 | - | 59,824 | 440,588 | 10 |
| 2018 | - | 474,309 | - | 157,267 | 631,576 | 14 |
| 2019 | - | 294,512 | - | 1,966 | 296,478 | 7 |
| 2020 | - | 82,303 | - | - | 82,303 | 2 |
| 2021 | - | 86,902 | - | - | 86,902 | 2 |
| 2022 | - | 183,062 | - | - | 183,062 | 4 |
| 2023 | - | 76,994 | 24,088 | - | 101,082 | 2 |
| 2024 | - | 63,581 | - | - | 63,581 | 1 |
| 2025 | - | 15,487 | - | - | 15,487 | 0 |
| 2026 | - | 111,636 | - | - | 111,636 | 2 |
| 2028 | - | 187,355 | - | - | 187,355 | 4 |
| 2029 | - | 99,612 | - | - | 99,612 | 2 |
| 2032 | - | 134,365 | - | - | 134,365 | 3 |
| 2033 | - | 144,977 | - | - | 144,977 | 3 |
| 2034 | - | 77,859 | - | - | 77,859 | 2 |
| 2043 | - | 33,809 | - | - | 33,809 | 1 |
| 2044 | - | 82,508 | - | - | 82,508 | 2 |
| **மொத்தம்** | **750,267** | **3,341,727** | **55,518** | **391,083** | **4,538,594** | **100** |

மூலங்கள்: திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கி இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்காக விநியோகிக்கப்பட்ட வங்கி மேலதிகப்பற்று மற்றும் முறிகள் நீங்கலாக

### 7.2.3.3 உள்நாட்டுப் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள்

2013 ஆம் ஆண்டில் 850.75 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட மொத்தப் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள் 2014 ஆம் ஆண்டில் ரூபா 777.5 பில்லியன் ஆகக் காணப்பட்டது. இந்த மொத்தத் தொகையில் 449.6 பில்லியன் ரூபா அல்லது 57.8 சதவீதம் உள்நாட்டுப் படுகடன் மீள் செலுத்துகையாகக் காணப்பட்ட அதேவேளை 327.9 பில்லியன் ரூபா (42.2 சதவீதம்) வட்டிக் கொடுப்பனவாகக் காணப்பட்டது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 2014 ஆம் ஆண்டில் உள்நாட்டுப் படுகடன்களுக்கான கடனழிவுக் கொடுப்பனவுகள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் முறையே 46.5 பில்லியன் ரூபாவாகவும் 26.8 பில்லியன் ரூபாவாகவும் குறைவடைந்துள்ளன.

2013 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 9.8 ஆகக் காணப்பட்ட மொத்த உள்நாட்டுப் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள் 2014 ஆம் ஆண்டில் சிறிதளவு குறைவடைந்து 7.9 சதவீதமாகக் காணப்பட்டது. 2013 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4.1 சதவீதமாகக் காணப்பட்ட உள்நாட்டு வட்டிக் கொடுப்பனவுகள் 3.4 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ள அதேவேளை முன்னைய வருடத்தில் 5.7 சதவீதமாகக் காணப்பட்ட உள்நாட்டு கடனழிவுக் கொடுப்பனவுகள் 4.6 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளன. முன்னைய வருடத்தில் 74.8 சதவீதமாகக் காணப்பட்ட மொத்த அரசாங்க வருமானத்திற்கான உள்நாட்டுப் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள் 65.1 சதவீதமாகக் குறைவடைந்துள்ளன.

அட்டவணை 7.2(இ) **உள்நாட்டுப் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள் (ரூபா மில்)**

| வருடம் | மூலதனக் கொடுப்பனவுகள் | வட்டிக் கொடுப்பனவுகள் | மொத்தம் |
|---|---|---|---|
| 2005 | 203,347 | 113,164 | 316,511 |
| 2006 | 247,536 | 133,787 | 381,323 |
| 2007 | 252,165 | 161,370 | 413,535 |
| 2008 | 258,720 | 182,198 | 440,918 |
| 2009 | 401,296 | 273,977 | 675,273 |
| 2010 | 389,672 | 297,127 | 686,799 |
| 2011 | 439,894 | 288,134 | 728,028 |
| 2012 | 415,441 | 317,659 | 733,100 |
| 2013 | 4,96,042 | 354,706 | 850,748 |
| 2014 | 449,554 | 327,934 | 777,488 |

*மூலங்கள்: திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களம், அரசாங்க கணக்குகள் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி*

## 7.3 வெளிநாட்டு உதவி முகாமை

மீள்பகிரத்தக்க வெளிநாட்டு உதவிகள் முறைமையின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களுக்கு கட்டுநிதிகள் ஒன்றில் செயற்திட்டத்திற்கு நேரடியாக நிதிகளை விடுவிப்பதன் மூலம் அல்லது உரிய அமைச்சின் ஊடாக செயற்திட்டத்துக்கு விடுவிப்பதன் மூலம் வழங்கப்பட்டன. 2014 ஜனவரி முதல் டிசம்பர் வரையான காலப்பகுதியில் மீள்பகிரத்தக்க வெளிநாட்டு உதவி முறைமையின் கீழ் 2,714 மில்லியன் ரூபா விடுவிக்கப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டில் 7,808 மில்லியன் ரூபா வெளிநாட்டு உதவி கொடைகள் காசாகக் கிடைக்கப்பெற்றன. இவை தவிர 1,607 மில்லியன் ரூபா பெறுமதியான மூலப்பொருட்களும் உபகரணங்களும் கிடைக்கப்பெற்றன.

உதவி வழங்கும் முகவர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் நிதிகளை பல்வேறு செயற்திட்டங்களுக்கு வழங்கும் நோக்கத்திற்காக மத்திய வங்கி கட்டுநிதிக் கணக்குகளைப் பேணி வருகின்றது. 2014 ஜனவரி முதல் டிசம்பர் வரையான காலப் பகுதியில் திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களம் இத்தகைய 09 புதிய கணக்குகளை ஆரம்பித்தது. அதனால் 2014 டிசம்பர் மாத இறுதியில் தொழிற்பாட்டில் காணப்பட்ட மொத்தக் கணக்குகளின் எண்ணிக்கை 103 ஆகக் காணப்பட்டது.இவ்வருடத்தில் உதவி வழங்கும் முகவர்களிடமிருந்து இக்கணக்குகளுக்கு 39,240 மில்லியன் ரூபா கிடைக்கப்பெற்றது.

## 7.4 அரசாங்க வருமானம்

### 7.4.1. வருமானம் சேகரித்தல்:

திறைசேரித் தொழிற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் 11 வரியல்லா வருமானத் தலைப்புக்களுக்கும் 01 வரி வருமானத் தலைப்புக்குமான வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராகத் தொழிற்படுகின்றார். மீளாய்வாண்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வரியல்லாத வருமானம் ரூபா 178.5 பில்லியனாகும். அதில் ரூபா 54 பில்லியன் அல்லது 30% சதவீதத்திற்கு சமமான தொகை காணப்பட்டதுடன் குறித்த வருடத்தில் சேகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட வரி வருமானம் ரூபா 32 பில்லியனாகும். மீளாய்வாண்டில் இத்திணைக்களம் வரியல்லா வருமானமாக 56.9 பில்லியன் ரூபாவையும் வரி வருமானமாக 31.3 பில்லியன் ரூபாவையும் உழைத்தது.

**அட்டவணை 7.4. (அ): திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்ட வரி மற்றும் வரியல்லா வருமானங்கள் 2013-2014**

| வருமான விபரம் | வருமானச் சேகரிப்பு ரூபா: மில்லியன் | | | |
|---|---|---|---|---|
| | 2013 | | 2014 | |
| | மதிப்பீடு | சேகரிப்பு | மதிப்பீடு | சேகரிப்பு |
| **வரியல்லா வருமானம்** | | | | |
| அரசாங்க கட்டட வாடகை | 612.0 | 620.8 | 650.0 | 641.7 |
| ஏனைய வாடகைகள் | 80.0 | 62.1 | 3,120.0 | 3,509.9 |
| கடன் வழங்கல் வட்டி | 8,167.0 | 8,178.8 | 8,425.0 | 6,757.8 |
| ஏனைய வட்டி | 1,610.0 | 1,485.0 | 1,475.0 | 1,220.1 |
| திணைக்கள விற்பனைகள் | 125.0 | 108.1 | 100.0 | 98.7 |
| நானாவிதமானவை | 7,000.0 | 7,497.1 | 8,000.0 | 2,851.6 |
| தண்டங்கள் மற்றும் பறிமுதல்கள் | 6,000.0 | 2,274.4 | 3,000.0 | 2,735.8 |
| ஏனைய பெறுகைகள் | 4,000.0 | 11,430.2 | 12,000.0 | 4,705.3 |
| ஏனைய நடைமுறை மாற்றல்கள் | 2,200.0 | 2,172.6 | 2,200.0 | 1,867.9 |
| மூலதனச் சொத்துக்களின் விற்பனை | 800.0 | 280.2 | 300.0 | 17,604.3 |
| துணைக் கடன் மீள் அறவீடு | 16,825.0 | 15,968.5 | 14,750.0 | 14,892.3 |
| **உப மொத்தம்** | **47,419.0** | **50,077.8** | **54,020.0** | **56,885.4** |
| **வரி வருமானம்** | | | | |
| தொலைபேசிப் பாவனையாளர் தீர்வை | 26,795.0 | 24,445.2 | 32,000.0 | 31,351.4 |
| **உப மொத்தம்** | 26,795.0 | 24,445.2 | 32,000.0 | 31,351.4 |
| **மொத்த வருமானம்** | **74,214.0** | **74,523.0** | **86,020.0** | **88,236.8** |

திறைசேரித் தொழிற்பாடுகள் பணிப்பாளர் நாயகம், மேற்குறித்த வரி மற்றும் வரியல்லா வருமானச் சேகரிப்புக்கு மேலதிகமாக வெளிநாட்டு உதவிகளுக்கான வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராகவும் தொழிற்படுகின்றார். வெளிநாட்டு உதவி வருமானக் குறியீட்டு இலக்கத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட 15.8 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில், மொத்த உள்நாட்டு உற்பத்தி மட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கை நடுத்தர வருமான நாடாகக் கணிக்கப்பட்டதன் காரணமாக இத்திணைக்களத்தினால் 9.4 பில்லியன் ரூபாவை மாத்திரமே சேகரிக்க முடிந்தது.

### 7.4.2. துணைக் கடன் மூலதனங்களையும் வட்டிகளையும் அறவிடுதல்:

அரசாங்கம், வெளிநாட்டு கொடை வழங்குநர்களிடமிருந்து கிடைக்கும் கடன்கள் வருமானங்களைப் பயன்படுத்தி, பொதுத் தொழில்முயற்சிகளுக்கு துணைக் கடன்களை வழங்குகின்றது. அவை நாட்டின் அபிவிருத்திச் செயன்முறைக்கு அத்தியவசியமான உட்கட்டமைப்புக்களை மேம்படுத்துவதற்குச் செயலூக்கமிக்க பங்களிப்பை வழங்கியுள்ளன. கடன் மீளளிப்புக்கள், வட்டி உள்ளிட்ட துணைக் கடன்களின் தவணைப் பணங்களை அறவிடுவது திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பிரதான பொறுப்புக்களில ஒன்றாகும். இத்திணைக்களம் இது தொடர்பான இற்றைப்படுத்தப்பட்ட தரவுத் தளமொன்றைப் பேணி வருகின்றது.

14.96 பில்லியன் ரூபாவை துணைக் கடன் தவணைப் பணமாக இத்திணைக்களம் சேகரித்ததுடன் 20.3 பில்லியன் ரூபாவை பொதுத் தொழில்முயற்சிகளுக்கான புதிய துணைக் கடன்களாக விடுவித்தது. அத்துடன் துணைக் கடன்களுக்கான வட்டியாக ரூபா 6.8 பில்லியன் அறவிடப்பட்டது.


வர்த்தக வங்கிகள், அபிவிருத்தி வங்கிகள், கிராமிய அபிவிருத்தி வங்கிகள் உள்ளிட்ட 56 பொதுத் தொழில்முயற்சிகளுக்குப் பிரதானமாக வழங்கப்பட்ட துணைக் கடன்களின் 2014.21.31 ஆந் திகதியில் உள்ளவாறான நிலுவையாகவுள்ள மொத்த மீதி 208 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய முகவரகம் என்பன போன்ற பாரிய கொடை வழங்குநர்களால் சலுகை அடிப்படையில் விடுவிக்கப்பட்ட பிரதான கடன்களைப் பயன்படுத்தி இந்தத் துணைக் கடன்கள் வழங்கப்படுகின்றன.

### 7.4.3.திறைசேரி உத்தரவாதங்கள்

பொதுத் தொழில்முயற்சிகள் 2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க அரசிறை முகாமை (ப் பொறுப்புச்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு உட்பட்ட வகையில் நிதி நிறுவனங்களிடமிருந்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களைப் பெறுவதற்கு கடன் உத்தரவாதங்களைச் சமர்ப்பிக்குமாறு அத்தொழில்முயற்சிகளிடம் கோரப்படுகின்ற போது திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களம் அத்தொழில்முயற்சிகளுக்கு திறைசேரி உத்தரவாதங்களை வழங்குகின்றது.

2014 ஆம் ஆண்டின் இறுதி வரையில் இத்திணைக்களம் 55.6 பில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உத்தரவாதங்களை வழங்கியிருந்தது. அவற்றில் 47.05 சதவீதமான உத்தரவாதங்கள் மின்சக்தி மற்றும் எரிசக்தித் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.

**வரைபு 7.4 (ஆ) திறைசேரி உத்தரவாதங்களின் துறைவாரியான உள்ளடக்கம் 2014**




## 7.4.4 கடன் உத்தரவாத நிதியம்:

அரசாங்க உத்தியோகத்தர்கள் அனைவரும் வீடொன்றைச் சொந்தமாக வைத்திருப்பதை உறுதிப்படுத்தும் நோக்கில் வங்கித் துறையின் ஊடாக வீடமைப்புக் கடன் வழங்கும் திட்டமொன்றை அரசாங்கம் 2005 ஆம் ஆண்டில் ஒரு வரவுசெலவுத் திட்ட முன்மொழிவாக அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ் கடன்களைப் பெற்ற உத்தியோகத்தர்கள் மரணிக்குமிடத்து அல்லது முழுமையாக அங்கவீனமடையுமிடத்து அல்லது மருத்துவக் காரணங்களுக்காக ஓய்வு பெறுமிடத்து கடன்கள் உடனடியாகத் தீர்க்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் கீழ் "உத்தரவாத நிதியம்" உருவாக்கப்பட்டது. இந்நோக்கத்திற்காக கடன் உத்தரவாத நிதியம் 2005 ஆகஸ்ட் மாதத்தில் 916.2 மில்லியன் ரூபா திறைசேரி முறிகளை ஆரம்ப முதலீடாகக் கொண்டு உருவாக்கப்பட்டது.

2005.04.26 ஆந் திகதிய 122 ஆம் இலக்க வரவு செலவுத் திட்டச் சுற்றறிக்கையின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இக் கடன் உத்தரவாத நிதியம், அரசாங்க ஊழியர்களின் மீதியாகவுள்ள கடன்களை வங்கிக்குச் செலுத்துவதன் மூலம் திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இந்நிதியத்தின் கீழ் 2012-2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் செலுத்தப்பட்ட கடன் மீதிகளின் விபரம் அட்டவணை 7.4 (இ) இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 7. 4 (இ): கடன் நிலுவைகளைத் தீர்த்தல்**

| வருடம் | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|
| உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | 63 | 78 | 46 |
| தீர்க்கப்பட்ட கடன்களின் பெறுமதி (ரூபா) | 47.1 | 59.7 | 32.4 |

362 அரசாங்க ஊழியர்கள் பயனடையும் விதத்தில் 257.7 ரூபா பெறுமதியான கடன் மீதிகள் வங்கிகளுக்குச் செலுத்தப்பட்டன. வினைத்திறனும் பயனுறுதியும் மிக்க முறையில் இந்நிதியத்தை முகாமை செய்வதன் ஊடாக அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் வசதிகளை மேலும் விரிவுபடுத்த முடியும் என்று திணைக்களம் எதிர்பார்க்கின்றது.

### 7.5 திறைசேரி தனிக் கணக்கு முறைமை (TSA) மற்றும் திறைசேரி நிதி முகாமை முறைமை (TFMS) என்பவற்றின் முன்னேற்றம்

அரசாங்க அமைச்சுக்களினதும் திணைக்களங்களின் திரவக் காசு வளங்களை வினைத்திறன்மிக்க முறையில் முகாமை செய்வதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் உதவும் ஒரு முக்கிய காரணியாக அரசாங்க வங்கி வலையமைப்பு முறைமை விளங்குகின்றது. ஒரே வங்கிமுறை வலையமைப்பில் அரச நிதி முகாமையின் வினைத்திறனையும் பயனுறுதியையும் மேம்படுத்தக்கூடிய திறைசேரி தனிக் கணக்கு முறைமையை திறைசேரி 2007 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது. திறைசேரி தனிக் கணக்கு முறைமையின் அமுலாக்கத்தின் காரணமாக வங்கிச் செயற்பாடுகளைச் சிக்கனமாகவும் பயனுறுதி வாய்ந்த முறையிலும் மேற்கொள்ள முடிந்ததுடன் மேலதிகப்பற்றையும் செலவுகளையும் ஒப்பீட்டளவில் குறைக்க முடிந்தது.

நிதி முகாமைத் தகவல்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்து முறைமையின் பயனர்-நட்புறவுத் தன்மையை உறுதிப்படுத்தும் நோக்கில் 2008 ஆம் ஆண்டில் திறைசேரி நிதி முகாமை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறையின் பயனுறுதித் தன்மையை மேலும் மேம்படுத்துவதற்காக 2014 ஆம் ஆண்டில் இம்முறைமை இற்றைப்படுத்தப்பட்டது. இந்த முறைமை உரிய நேரத்திலான தகவல்களைச் சேகரித்துத் தருவதனால், நாளாந்தம் பயனுறுதி வாய்ந்த நிதி முகாமைத் தீர்மானங்களை முகாமைத்துவதத்தினால் எடுக்க முடிகின்றது. நிதி முகாமைத் தகவல் முறைமை (FMIS) திரட்டு நிதியத்துடன் தொடர்புடையதாக மேற்கொள்ளப்படும் அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களுக்குமான வசதிகளைக் கொண்டுள்ளதுடன் நாளின் முடிவில் முழுமையான காசு நிலைமை தொடர்பான தகவல்களையும் வழங்குகின்றது.

## 7.6 விவசாய உற்பத்திகளை கொள்வனவு செய்தல் மற்றும் விற்பனை செய்தல் ஆகியவற்றுக்கான சுழற்சி நிதியின் செயற்பாடுகள்

2006 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் பிரகாரம் நெல் மற்றும் அரிசி என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்காக களஞ்சிய வசதிகளையும் விற்பனை வலையமைப்பையும் ஏற்படுத்துவதற்காக தாபிக்கப்பட்டுள்ள இந்தச் சுழற்சி நிதியம் 2014 ஆம் ஆண்டிலும் செயற்பட்டது.

திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் 2014 ஆம் ஆண்டினுள் ரூபா 227.46 மில்லியன் தொகையினை அந்தந்த கூட்டுறவுச் சங்கங்களின் கொள்வனவு வலையமைப்பினூடாக நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக மாவட்டச் செயலகங்களுக்கு வழங்கியுள்ளது. எவ்வாறாயினும், கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது மாவட்டச் செயலகங்களின் மூலம் கோரப்படுகின்ற நிதியத்தின் அளவு 87 % சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது. அம்பாறை, மொனராகலை, அநுராதபுரம், பொலநறுவை, திருகோணமலை, குருநாகல் உட்பட நெற் பயிர்ச் செய்கையினை மேற்கொள்கின்ற 13 பிரதான மாவட்டங்களில் சிறுபோகம் மற்றும் பெரும்போகம் ஆகிய இரண்டிலும் நிலவிய வறட்சியான காலநிலை இதற்குப் பிரதான தாக்கத்தைச் செலுத்தியுள்ளது.

***அட்டவணை 7.6(அ) 2013 / 2014ஆம் ஆண்டுகளில் சிறுபோக மற்றும் பெரும்போகங்களில் நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக நிதியத்தினை விடுவித்தல்***

*ரூபா மில்.*

| மாவட்டச் செயலகத்தின்/ நிறுவனத்தின் பெயர் | 2013 | | | 2014 | | |
|---|---|---|---|---|---|---|
| | சிறுபோகம் | பெரும்போகம் | மொத்தம் | சிறுபோகம் | பெரும்போகம் | மொத்தம் |
| அம்பாறை | 30.00 | 175.00 | 205.00 | | 13.76 | 13.76 |
| அநுராதபுரம் | 100.00 | 50.00 | 150.00 | | | - |
| மட்டக்களப்பு | | | - | | 80.00 | 80.00 |
| ஹம்பாந்தோட்டை | 200.00 | 150.00 | 350.00 | | | - |
| யாழ்ப்பாணம் | 22.00 | - | 22.00 | 20.00 | | 20.00 |
| கிளிநொச்சி | 25.00 | - | 25.00 | 25.00 | | 25.00 |
| மன்னார் | 30.00 | - | 30.00 | | | - |
| மொனராகலை | 30.00 | - | 30.00 | 10.00 | | 10.00 |
| பொலநறுவை | 275.00 | 240.00 | 515.00 | 13.70 | | 13.70 |
| திருகோணமலை | 12.00 | 25.00 | 37.00 | | | - |
| முல்லைத்தீவு | | | - | 50.00 | | 50.00 |
| வவுனியா | 150.00 | - | 150.00 | 15.00 | | 15.00 |
| நெல் சந்தைப்படுத்தல் சபை | 250.00 | - | 250.00 | | | - |
| **மொத்தம்** | **1,124.00** | **640.00** | **1,764.00** | **133.70** | **93.76** | **227.46** |

வருடக் காலப்பகுதியில் ரூபா 227.46 மில்லியன் தொகையினை மாவட்டச் செயலகங்களிடமிருந்து திணைக்களத்திற்கு மீண்டும் அறவிட்டுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. இது கடந்த வருட அறவீட்டுடன் ஒப்பிடும் போது 70% சதவீத அதிகரிப்பாகும்.

### *அட்டவணை 7.6(ஆ) 2014 ஆம் ஆண்டினுள் சுழற்சி நிதியின் செயற்பாடுகள்*

*ரூபா மில்.*

| மாவட்டச் செயலகத்தின் பெயர் | 2014.01.01 இல் ஆரம்ப மீதி | 2014 ஆம் ஆண்டினுள் நிதியங்களை விடவித்தல் | 2014 ஆம் ஆண்டினுள் அறவீடு | | | 2014.12.31 இல் இறுதி மீதி |
|---|---|---|---|---|---|---|
| | | | முன்னைய வருட நிலுவைகளைச் செலுத்துதல் | 2014 இல் விடுவித்தவைகளைச் செலுத்துதல் | மொத்த அறவீடுகள் | |
| நெல் சந்தைப்படுத்தல் சபை | 2,250.00 | - | 195.45 | - | 195.45 | 2,054.55 |
| கூட்டுறவு அபிவிரத்தித் திணைக்களம் | 5.65 | | - | - | - | 5.65 |
| வர்த்தகத் திணைக்களம் | 64.69 | - | 0.60 | - | 0.60 | 64.09 |
| அம்பாறை | 368.83 | 13.765 | 307.66 | 0.57 | 308.23 | 74.37 |
| அநுராதபுரம் | 264.59 | - | 182.92 | - | 182.92 | 81.67 |
| மன்னார் | 50.10 | - | 50.10 | - | 50.10 | - |
| திருகோணமலை | 37.00 | - | 37.00 | - | 37.00 | - |
| ஹம்பாந்தோட்டை | 355.80 | - | 4.07 | - | 4.07 | 351.73 |
| மட்டக்களப்பு | - | 80.000 | - | 66.58 | 66.58 | 13.42 |
| மொனராகலை | 4.09 | 10.000 | 4.09 | 4.00 | 8.09 | 6.00 |
| பொலநறுவை | 552.99 | 13.700 | 492.24 | 13.70 | 505.94 | 60.75 |
| புத்தளம் | 20.00 | - | - | - | - | 20.00 |
| வவுனியா | 141.75 | 15.000 | 141.75 | 3.71 | 145.46 | 11.29 |
| முல்லைத்தீவு | 45.00 | 50.000 | 45.00 | - | 45.00 | 50.00 |
| கிளிநொச்சி | 35.40 | 25.000 | 35.40 | 5.65 | 41.05 | 19.35 |
| யாழ்ப்பாணம் | 22.00 | 20.000 | 22.00 | 20.00 | 42.00 | - |
| **மொத்தம்** | **4,217.88** | **227.46** | **1,518.27** | **114.21** | **1,632.48** | **2,812.86** |